# ஸ்ரீ மீனாக்ஷீ பஞ்சதசீ ஸ்தோத்ரம்



ப்ரும்மஸ்ரீ தேதியூர் ஸுப்ரஹ்மண்ய சாஸ்த்ரியள்



... பப்ளிஷர்ஸ், திருவல்லிக்கேணி.

# ஸ்ரீ மீனாக்ஷீ பஞ்சதசீ ஸ்தோத்ரம்



ப்ரும்மஸ்ரீ தேதியூர் ஸுப்ரஹ்மண்ய சாஸ்த்ரியள்

கிரி ப்ரஸ், பப்ளிஷர்ஸ், திருவல்லிக்கேணி.

**SECOND
EDITION
May '47.**

GIRI PRESS

**PRICE 0-5-0**

*Printed & Published*
by K. Kylasamier
at GIRI PRESS
Triplicane :. Madras.

உ

# பதிப்புரை.

இப்புஸ்தகத்தின் முதற் பதிப்பு 1943ம் வருஷம் காகிதக் கட்டுப்பாடுகளுக்கிடையே ப்ரசுரிக்கப்பட்டதால் சிறிய அளவு புஸ்தகமாக வெளியிடப்பட்டது. இரண்டாவது பதிப்பான இப்புஸ்தகம் பெரிய அளவாக வெளியிடப்பட்ட போதிலும் அதிலுள்ள கருத்துக்களோ வாக்யங்களோ சிறிதும் மாற்றப்படவில்லை.

இப் புஸ்தகத்தின் ஆசிரியரான ப்ரும்மஸ்ரீ தேதியூர் ஸுப்ரஹ்மண்ய சாஸ்த்ரியள் அவர்களுக்கு கண்ணில் உபாதை ஏற்பட்டு ப்ரகாசம் குறைந்து கஷ்டப்பட்டு வந்தபொழுது இந்தப் புஸ்தகத்தில் உள்ள ச்லோகங்கள் மூலம் ஸ்ரீ பராசக்தியை ஸ்தோத்ரம்

செய்து வந்தார். அக்காரணத்தால் அவருடைய கண்ணிலுள்ள தோஷம் நிவர்த்தியாகி இழந்த ப்ரகாசத்தை மீண்டும் அடைந்தார்.

ஆகையால் இந்த ச்லோகங்களை ப்ரதிதினம் பாராயணம் செய்து வருபவர்களுக்கு கண்ணில் ஏற்படும் திமிர தோஷங்கள் நிவர்த்தியாவதுடன் ஸ்ரீ பராசக்தியின் அனுக்ரஹமும் பரிபூர்ணமாக ஏற்படும் என்பது நிச்சயம்.

திருவல்லிக்கேணி,
9-5-1947.

K. கைலாஸமய்யர்,
பதிப்பாளர்.

# முன்னுரை.

இச்சிறிய புஸ்தகம் தேவியினுடைய தத்வத்தை ப்ரகாசம் செய்துவைக்கும் நூலாகும். பதினைந்து மாத்ருகாக்ஷரங்கள் அடங்கிய ஓர் மஹாமந்த்ரமானது தேவியைக் குறிப்பிட்டு ஏற்பட்டதென்பது வித்வத் கோஷ்டியில் ப்ரஸித்தமானது. அந்த பதினைந்து அக்ஷரங்களில், மூன்று க என்ற அக்ஷரங்களும், இரண்டுவிதமான ஹ என்ற அக்ஷரங்களும் ஆக ஐந்து அக்ஷரங்களும் பரமசிவனுடைய திருவாக்கிலிருந்து வெளிவந்ததாகவும்; ஹ்ரீம் என்ற பீஜாக்ஷரங்கள் பரமேச்வரன் பராசக்தி இவ்விருவர்களுடைய வாக்கிலிருந்தும் ஒரே காலத்தில் வெளியானதென்றும், பாக்கி ஏழு அக்ஷரங்கள் காமேச்வரீ என்ற பராசக்தியினுடைய திருவாக்கிலிருந்து வெளியானதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இம் மஹாமந்த்ரத்தைத் தான் பஞ்சதசீ என்று வித்வான்கள் சொல்கிறார்கள். இம் மஹாமந்த்ரத்தை மூன்று பாகமாக, அதாவது, ஐந்து அக்ஷரத்தை ஒரு பாகமாகவும், ஆறு அக்ஷரத்தை மற்றொரு பாகமாகவும், நான்கு அக்ஷரத்தை மூன்றாவது பாகமாகவும் பிரித்தறிய வேண்டும். முதல் பாகம் அக்னி கண்டம் என்றும், இரண்டாவது பாகம் ஸூர்ய கண்டம் என்றும், மூன்றாவது பாகம் சந்த்ர கண்டம் என்றும் சொல்லப்படும். அந்த மஹாமந்த்ரத்திலுள்ள ஒவ்வொரு அக்ஷரத்தையும ஒவ்வொரு ச்லோகமாகச் செய்து தேவியை ஸந்தோஷிக்

கச் செய்தால் தேவியினுடைய பரிபூர்ணமான அனுக்ரஹத்தால் அக்னி, சந்த்ரன், ஸூர்யன் என்ற மூன்று தேவதைகளினுடைய ப்ரஸாதமும் ஏற்பட்டு, அதிலும் மத்யகண்டத்தின் அதிதேவதையான ஸூர்யனுடைய அனுக்ரஹத்தால் கண்களுக்குள்ள திமிர தோஷம் நிவர்த்தியாகி, சக்ஷுரிந்த்ரியத்திற்கு தேவியினுடைய ஸாக்ஷாத் தர்சனத்திற்கு அர்ஹமான ப்ரகாசம் ஏற்படுமென்று, ச்யவனமஹர்ஷிக்கு அச்வினி தேவதைகள் உபதேசம் செய்த ப்ரகரணத்தை அநுஸரித்து கண்ணில் ஏற்பட்ட ஆட்யதோஷ நிவர்த்திக்காக, மேற்சொன்ன மஹாமந்த்ரத்தின் ஒவ்வொரு அக்ஷரத்தையும் ஒவ்வொரு ச்லோகமாகச் செய்து பரதேவதையைப் பூஜிப்பதே இந்த புஸ்தகத்தின் முக்யமான கருத்தாகும்.

K. கைலாஸமய்யர்.



ஸ்ரீ மீனாக்ஷி

॥ ओं ॥

## ॥ श्रीमीनाक्षी पञ्चदशी स्तोत्रम् ॥

॥ ஓம் ॥

# ஸ்ரீ மீ ஞா க்ஷீ ப ஞ் ச த சீ ஸ்தோ த் ரம்.

---

कस्मात्पर्वतराजराजतनये त्वत्पादपद्मे नतम्
दीनं मां समुपेक्षसे मम दृशोः भानं कुतो लुप्यते ।
को वा त्वच्चरणारविन्दभजनं कुर्वन् कृती भूतले
दारिद्र्यं लभते कथं च जननि दृष्ट्या विहीनो भवेत् ॥ १ ॥

கஸ்மாத் பர்வதராஜராஜ தநயே
த்வத்பாத பத்மே நதம்
தீநம் மாம் ஸமுபேக்ஷஸே மமத்ருஶோ:
பாநம் குதோ லுப்யதே ।
கோவா த்வச்சரணாரவிந்த பஜநம்
குர்வந் க்ருதீ பூதலே
தாரித்ர்யம் லபதே கதம் ச ஜநநி
த்ருஷ்ட்யா விஹீநோ பவேத் ॥ 1 ॥

ஹே பார்வதி! உன்னுடைய சரணாரவிந்தத்தையே நம்பி இருக்கும் என்னை ஏன் உபேக்ஷை செய்கிறாய்? என் கண்களுக்கு ப்ரகாசம் ஏன் குறைந்தது? புண்யத்தைச் செய்து உன் பாதாரவிந்தத்தைப் பூஜிக்கிறவன் தரித்ரனாக இருப்பான் என்பதோ, த்ருஷ்டிக் குறைவோடு கூடியவனாக இருப்பான் என்பதோ எவ்விதம் ஸம்பவிக்கும்?

---

एवं पाण्ड्यनृपात्मजेति भुवने को वा जगन्मातरम्
स्तोतुं त्वां निपुणो महेश्वरि शिवे नाहं समर्थस्ततः ।
एतन्न्याय्यमिति त्वमेव मनसा निश्चित्य संगृह्य माम्
चक्षुष्मन्तमथाद्यमाशु कुरुषे यद्यम्ब माता मम ॥ २ ॥

ஏவம் பாண்ட்யந்ருபாத்மஜேதி புவநே
கோ வா ஜகந்மாதரம்
ஸ்தோதும் த்வாம் நிபுணோ மஹேஶ்வரி ஶிவே
நாஹம் ஸமர்தஸ்தத: ।
ஏதந்ந்யாய்யமிதி த்வமேவ மநஸா
நிஶ்சித்ய ஸங்க்ருஹ்ய மாம்
சக்ஷுஷ்மந்தமதாட்யமாஶு குருஷே
யத்யம்ப மாதா மம ॥ 2 ॥

பாண்டியராஜனின் பெண்ணான ஹே மீனாக்ஷீ! நீ எவ்வித மஹிமையுடன் கூடியவள் என்று இப்புவியில் ஒருவனாலும் ஸ்தோத்ரம் செய்ய முடியாது. இவ்விதமிருக்க, நான் ஒரு அல்ப மனுஷ்யன். நான்

எவ்விதம் உன்னை ஸ்தோத்ரம் செய்வேன். ஆகிலும் என்னை உன் ஜனமாக ஸ்வீகரித்துக்கொண்டு, கண்ணையும் ஐச்வர்யத்தையும் கொடுத்து என்னை ரக்ஷிக்கவேண்டும். இவ்விதமானால்தான் நீ எனக்கு தாயாக ஆவாய்.

---

ईशात्वं सकलार्थ दान निपुणा कर्मानुसारान्नृणाम्
पूर्वं त्वं बहुपाप कर्म कृतवान् एतत्फलं भुज्यताम् ।
ईशित्रीति तवांबिके भगवति नामार्थशून्यं भवेत्
त्वद्भक्तैः कृतकार्यमत्र सकलं नोचेत्तवाराधनम् ॥ ३ ॥

ஈசாத்வம் ஸகலார்த தாந நிபுணா
கர்மாநுஸாராந் ந்ருணாம்
பூர்வம் த்வம் பஹுபாப கர்ம க்ருதவாந்
ஏதத்பலம் புஜ்யதாம் ।
ஈசித்ரீதி தவாம்பிகே பகவதி
நாமார்தசூன்யம் பவேத்
த்வத்பக்தை: க்ருதகார்ய மத்ரஸகலம்
நோசேத்தவாராதநம் ॥ 3 ॥

"ப்ராணிகளுடைய பூர்வ கர்மாவை அனுஸரித்துத்தான் நான் ரக்ஷிக்கிறவள், நீ முன் ஜன்மாவில் மஹாபாபத்தைச் செய்திருக்கிறாய், அதன்பயனாக உன் கண்ணிற்கு ப்ரகாசமில்லாது போய்விட்டது, நான் என்ன செய்ய முடியும்" என்று என்னை நீ தள்ளிவிட முடியாது. அப்படியானால் நீ ஸகலத்தையும் சாஸிக்கும் சக்தி உள்ளவளாக எப்படி ஆகமுடி

யும்? அவ்விதம் உனக்கு ஏற்பட்டிருக்கும் பெயர் வீணாக ஆகிவிடும். உன்னை நான் ஆராதிக்காது போனால் நீ சொல்வது ந்யாயமாகும். நான் உன்னை ஆராதிக்கிறபடியால் என் பூர்வ பாபங்களையும் நாசம் செய்து, நான் கேட்கும் வரனை எனக்குக் கொடுத்தே ஆகவேண்டும்.

---

लक्ष्मीं क्षीरसमुद्रराजतनयां त्वद्भक्तगेहे स्थिराम्

कर्तुं शक्तिरहो तवास्ति जननि गेहे परं मे कुतः ।

लक्ष्मीस्थापनमुख्यकार्यविमुखा त्वं भासि सर्वेश्वरि

लक्ष्मीं स्थापय शीघ्रमेव भवति चक्षुश्च संदेहि मे ॥ ४ ॥

லக்ஷ்மீம் க்ஷீரஸமுத்ரராஜதநயாம்
த்வத்பக்த கேஹே ஸ்திராம்
கர்தும் ஶக்திரஹோ தவாஸ்தி ஜநநி
கேஹே பரம் மே குத: ।
லக்ஷ்மீஸ்தாபந முக்யகார்ய விமுகா
த்வம் பாஸி ஸர்வேஶ்வரி
லக்ஷ்மீம் ஸ்தாபய ஶீக்ரமேவ பவதி
சக்ஷுஶ்ச ஸந்தேஹி மே ॥ 4 ॥

பாற்கடலில் உண்டான மஹாலக்ஷ்மியை, உன்னைப் பூஜிக்கிறவர்களுடைய க்ருஹத்தில் ஸ்திரமாக வாஸம் செய்யும்படி ஆக்ஞாபிக்க உனக்கோ சக்தி உண்டு. நானோ உன்னை பூஜித்து வருகிறேன். என்

க்ருஹத்திற்கு நீ ஏன் லக்ஷ்மியை அனுப்பவில்லை? ஆகையால் சீக்கிரமாக லக்ஷ்மீகடாக்ஷத்தை என் க்ருஹத்தில் உண்டு பண்ணி, என் கண்களுக்கு ப்ரகாசத்தையும் கொடுக்கவேண்டும்.

---

ह्रींकारार्णवकौस्तुभां भगवतीं श्रीपाण्ड्यराजात्मजाम्
भक्तत्राणपरायणां हरिहरब्रह्मादिवन्द्यां शिवाम् ।
ह्रींमध्यां त्रिदशेश्वरीं त्रिणयनश्रीतुल्यसौभाग्यदाम्
वन्देहं मम दृष्टिदोषतमसां भेत्रीं परामम्बिकाम् ॥ ५ ॥

ஹ்ரீங்காரார்ணவ கௌஸ்துபாம் பகவதீம்
ஸ்ரீபாண்ட்யராஜாத்மஜாம்
பக்தத்ராண பராயணாம் ஹரிஹர
ப்ரஹ்மாதி வந்த்யாம்ஶிவாம் ।
ஹ்ரீம்மத்யாம் த்ரிதஶேஸ்வரீம் த்ரிணயந
ஸ்ரீ துல்ய ஸௌபாக்யதாம்
வந்தேஹம் மம த்ருஷ்டிதோஷ தமஸாம் பேத்ரீம்
பராமம்பிகாம் ॥ 5 ॥



மாயா பீஜமாகிய கடலில் கௌஸ்துபமணியைப்போல் உண்டான பாண்டியராஜனுடைய பெண்ணான ஸ்ரீ மீனாக்ஷிதேவியானவள் மாயா பீஜத்தின் நடுவில் வஸிக்கிற காரணத்தைக்கொண்டு, அந்த பீஜாக்ஷரத்தை ஜயித்துக்கொண்டு நமஸ்கரிக்கின்றேன். என் கண்ணை மறைக்கும் இருளை நாசம் செய்து என்னை ரக்ஷிக்கவேண்டும்.

हत्वा शुम्भनिशुंभमुख्यदितिजान् देवेप्सितार्थप्रदा
दुर्गा मामकचक्षुषः तिमिरमप्यद्याऽशु विध्वंसयेत् ।
हत्वा चाक्षुषदोषमद्य जननी मां पालयेत् बालकम्
तां नित्यं प्रणतोस्म्यहं विनयतः सेवे जगत्पालिनीम् ॥ ६ ॥

ஹத்வா ஶும்ப் நிஶும்பமுக்யதிதிஜாந்
தேவேப்ஸிதார்தப்ரதா
துர்கா மாமகசக்ஷுஷ: திமிர மப்யத்யாஶு
வித்வம்ஸயேத் ।
ஹத்வா சாக்ஷுஷதோஷமத்ய ஜநநீ
மாம் பாலயேத் பாலகம்
தாம் நித்யம் ப்ரணதோஸ்ம்யஹம்
விநயத: ஸேவே ஜகத்பாலிநீம் ॥ 6 ॥

ஶும்பன் நிஶும்பன் என்ற அஸுரர்களைக் கொன்று இந்த்ரன் முதலான தேவர்களுக்கு ஸ்வர்க்க ராஜ்யத்தை ஸ்வாதீனம் செய்து கொடுத்த பரதேவதையான உனக்கு என் கண்ணில் உள்ள திமிர தோஷத்தை நிவ்ருத்திசெய்து வைப்பது மிகவும் லேசானது. ஆகையால் உடன் அந்த தோஷத்தை நாசம் செய்யவேண்டும். கண்ணில் உள்ள தோஷத்தை நிவர்த்தி செய்து மிகவும் மூடனை என்னை ரக்ஷிக்க வேண்டும். அந்த பரதேவதையான உன்னை நான் சக்த்யானுஸாரம் பூஜித்து வருகிறேன்.

सर्वेशीं निजभक्तकल्पलतिकां कामेश्वरीं कामदाम्
सर्वज्ञां सदसद्विलक्षण जगत्सत्ताप्रदां शाश्वतीम् ।
सत्यज्ञानसुखात्मिकां भगवतीं मायामयीं मोहिनीम्
वन्देऽहं मधुरेश्वरीं नयनयोः दिव्यप्रकाशाप्तये ॥ ७ ॥

ஸர்வேஶீம் நிஜபக்த கல்பலதிகாம்
காமேஶ்வரீம் காமதாம்
ஸர்வக்ஞாம் ஸதஸத்விலக்ஷண ஜகத் ஸத்தா
ப்ரதாம் ஶாஶ்வதீம் ।
ஸத்யக்ஞாந ஸுகாத்மிகாம் பகவதீம்
மாயாமயீம் மோஹிநீம்
வந்தே஽ஹம் மதுரேச்வரீம் நயநயோ:
திவ்ய ப்ரகாஶாப்தயே ॥ 7 ॥

பக்தர்களுடைய மனோரதத்தைப் பூர்த்தி செய்து வைக்கும் விஷயத்தில் கல்பலதையைப்போல் விளங்குகிற மதுராபுரியை ஆண்டுவரும் மீனாக்ஷி என்ற பரதேவதையே! கண்ணில் உள்ள திமிர தோஷம் நிவர்த்தியாகும் பொருட்டு நமஸ்கரிக்கின்றேன்.

---

कस्त्वं किं फलमिच्छसीति जननी प्रश्ने नकश्चिच्छिवे
वक्तुं त्वां निपुणः त्वमेव चतुरा ज्ञातुं स्वरूपं मम ।
कोऽहं ब्रूहि महेश्वरोहं इति वा त्वं वाहमेवाम्बिके
को भेदः शिवयोः तथैव शिवदे जीवेशयोर्वा कथम् ॥ ८ ॥

கஸ்த்வம் கிம் பலமிச்சஸீதி
ஜநநீ ப்ரஶ்நே நகஶ்சிச்சிவே
வக்தும் த்வாம் நிபுண: த்வமேவ சதுரா
ஞாதும் ஸ்வரூபம் மம ।
கோऽஹம் ப்ரூஹி மஹேஶ்வரோஹம் இதிவா
த்வம் வாஹமேவாம்பிகே
கோபேத: ஶிவயோ:
ததைவ ஶிவதே ஜீவேஶயோர்வா கதம் ॥ 8 ॥

"உன் ஸ்வரூபமென்ன, நீ யார்? உனக்கு என்ன வேண்டும்" என்று நீ கேட்டால், நான் பதில் அளிக்க சக்தியற்றவன். நீ தான் சொல்லவேண்டும். நான் சிவஸ்வரூபமா? அல்லது சிவை என்ற உன் ஸ்வரூபமா? சிவனுக்கும், சிவையாகிய உனக்கும் பேதமேது? சிவன், சிவை என்ற இரண்டு தத்வங்களைத் தான் வேதாந்திகள் ஜீவன் ஈச்வரன் என்று சொல்வார்கள். ஆகையால் என் ஸ்வரூபம் உனக்கு நன்ருகத் தெரியும்பொழுது நீ கேட்பது ந்யாயமில்லை.

---

हंसीत्वं भुवनेति शंकरगुरोः वाक्येन जानाम्यहम्
त्वामेवाम्ब ममापि दोषमखिलं कृत्वा गुणं पालय ।
हंसस्सोहमितीह मन्त्र जपतः प्रत्यक्षतो दर्शनम्
त्वद्रूपस्य ममापि देहि शिवदे श्रीराजराजेश्वरि ॥ ९ ॥

ஹம்ஸீத்வம் புவநேதி ஶங்கரகுரோ:
வாக்யேந ஜாநாம்யஹம்
த்வாமேவாம்ப மமாபி தோஷமகிலம்.
க்ருத்வா குணம் பாலய ।
ஹம்ஸ்ஸோஹமிதீஹ மந்த்ர ஜபத:
ப்ரத்யக்ஷதோ தர்ஶநம்
த்வத்ரூபஸ்ய மமாபி தேஹி
ஶிவதே ஸ்ரீ ராஜராஜேச்வரி ॥ 9 ॥

ஹே ராஜ ராஜேச்வரி! சங்கரபகவத் பாதாளுடைய க்ருதியான ஸௌந்தர்யலஹரீ மூலம், நீ இந்த லோகத்தில் அபூர்வமான பெண் ஹம்ஸ பக்ஷி என்று வெளியாகிறது. ஹம்ஸபக்ஷியின் ஸ்வபாவமோ தோஷத்தை குணமாகச் செய்து வைப்பதே. ஆகையால் என் குற்றங்களையும் குணங்களாக எடுத்துக்கொண்டு என்னை ரக்ஷிக்கவேண்டும்.

---

लक्ष्मीं देहि सदा ममापि कृपया श्रीपाण्ड्यराजात्मजे
दोषं चाक्षुषमप्यसह्यमेव नितरां दूरीकुरुत्वं शिवे ।
लक्ष्मी वाङ्मुखदेवताभिरनिशं संस्तूयमानां पराम्
त्वामेवात्र समाश्रये नहि परा देवी त्रिलोक्यां खलु ॥ १० ॥

லக்ஷ்மீம் தேஹி ஸதா மமாபி க்ருபயா
ஸ்ரீ பாண்ட்யராஜாத்மஜே
தோஷம் சாக்ஷுஷமப்யஸஹ்யமேவ நிதராம்
தூரீகுரு த்வம் ஶிவே ।
லக்ஷ்மீ வாங்முகதேவதாபிரநிஶம்
ஸம்ஸ்தூயமானும் பராம்
த்வாமேவாத்ர ஸமாஶ்ரயே நஹி பரா
தேவீ த்ரிலோக்யாம் கலு ॥ 10 ॥

என்னிடத்திலும் லக்ஷ்மீ கடாக்ஷத்தை உண்டு பண்ணி, அஸஹ்யமான நேத்ரதோஷத்தையும் நிவர்த்தி செய்யவேண்டும். லக்ஷ்மீ ஸரஸ்வதி முதலான தேவதைகளால் பூஜிக்கப்படுகிற உன்னையே நான் அண்டியிருக்கிறேன். உன்னைத் தவிர வேறு தெய்வம் த்ரிலோகத்திலும் இல்லை.

---

ह्रीं बीजैस्त्रिविधैः शिवासु घटिताः खण्डाः त्रयाः शंकरि
यस्मिन् मन्त्रवरे स चापि मनुराट् यस्याःस्वरूपं शिवे ।
ह्रीं मायेति च कथ्यते बुधवरैः या शक्तिराद्या परा
सा त्वं देवि नमस्करोमि भवतीं देह्यात्मचक्षुः परे ॥ ११ ॥

ஹ்ரீம் பீஜை: த்ரிவிதை: ஶிகாஸு
கடிதா: கண்டா: த்ரயா: ஶங்கரி
யஸ்மிந் மந்த்ரவரே ஸசாபி
மனுராட் யஸ்யா:ஸ்வரூபம் ஶிவே ।
ஹ்ரீம் மாயேதிச கத்யதே புதவரை:
யா ஶக்தி ராத்யா பரா
ஸா த்வம்தேவி நமஸ்கரோமி
பவதீம் தேஹ்யாதமசக்ஷு: பரே ॥ 11 ॥

ஹ்ரீம் என்ற பீஜாக்ஷரமானது தலை முடியில் அலங்கரிக்கப்பட்டு, மூன்று பாகங்களாக விளங்கி வரும் மஹாமந்த்ரமானது எந்த பரதேவதையி னுடைய ஸ்வரூபமோ, ஹ்ரீம் என்ற பீஜாக்ஷரத் தையே எந்த பரதேவதையின் ஸ்வரூபமாகவும் வித் வான்கள் சொல்கிறார்களோ அப்படிப்பட்ட மஹிமை உள்ள பரதேவதை நீ தான். உன்னை நமஸ் கரிக்கின்றேன். கண்ணைக் கொடுத்து என்னை ரக்ஷிக்க வேண்டும்.

---

सर्वे विष्णुमुखाः सुराश्च जननि त्वच्छासने संस्थिताः
तस्माद्देवि नवग्रहाः तव मते स्थित्वैव सौख्यप्रदाः ।
सत्येवं मम दुःखमेव बहुधा कुर्वन्ति सूर्यादयः
देवाः त्वत्पदपद्ममेव शरणं प्राप्तोऽस्मि मां पालय ॥ १२ ॥

ஸர்வே விஷ்ணுமுகா: ஸுராஶ்ச ஜநநி
த்வச்சாஸநே ஸம்ஸ்திதா:
தஸ்மாத்தேவி நவக்ரஹா: தவமதே
ஸ்தித்வைவ ஸௌக்ய ப்ரதா: ।
ஸத்யேவம் மமதுக்க மேவ
பஹுதா குர்வந்தி ஸூர்யாதய:
தேவா: த்வத்பதபத்மமேவ ஶரணம்
ப்ராப்தோஸ்மி மாம் பாலய ॥ 12 ॥

விஷ்ணு முதலான தேவர்களும் உன்னுடைய ஆக்ஞையை அனுஸரித்து, அவரவர்கள் ஸ்தானத்தை பரிபாலனம் செய்கிறார்கள். அது போலவே ஸூர்யன் முதலான நவக்ரஹங்களும் உன்னுடைய அபிப்ராயப்படிதான் ப்ராணிகளுக்கு ஸௌக்யத்தைக் கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். அப்படி இருக்க, அந்த நவக்ரஹங்களும் என் விஷயத்தில் கஷ்டத்தையே கொடுத்து வருகிறார்களே! நான் என்ன உன்னை பூஜிக்கவில்லையா?

---

कष्टं त्वद्भजने निवर्त्तत इति श्रुत्वा भजाम्यंबिके
त्वामेवाद्य तथापि मे नहि सुखं तत्कारणं ब्रूहि मे ।
कष्टात्कष्टपरंपरा मम गृहे संवर्धते मानदे
मातुस्ते शिशुपालनात् विमुखता नैवोचिता शांभवि ॥ १२ ॥

கஷ்டம் த்வத்பஜனே நிவர்த்தத இதி
ச்ருத்வா பஜாம்யம்பிகே
த்வாமேவாத்ய ததாபி மே
நஹி ஸுகம் தத்காரணம் ப்ரூஹிமே ।
கஷ்டாத்கஷ்டபரம்பரா மம க்ருஹே
ஸம்வர்ததே மாநதே
மாதுஸ்தே ஶிஶுபாலநாத் விமுகதா
நைவோசிதா ஶாம்பவீ ॥ 13 ॥

உன்னை பஜனம் செய்தால் துக்கநிவ்ருத்தி ஏற்படும் என்று தெரிந்துகொண்டு உன்னை நான் ஆராதித்து வருகிறேன். ஆனால் என் க்ருஹத்திலோ, துக்கம்தான் வந்து கொண்டிருக்கிறது, அதற்கு காரணமோ தெரியவில்லை! ஆனால் உன்னை ஆராதிப்பதில் தவறுதல் இருக்கிறதென்று நினைத்து என்னை உபேக்ஷிக்கிருயோ என்னமோ? அது ரொம்பவும் பிசகு. சிசுக்கள் தாயை காலால் உதைத்ததற்காக, அத் தாய் சிசுக்களை உபேக்ஷிப்பாளா? நான் ஒரு சிசு; நீ லோக மாதா. என்னிடம் என்ன தவறுதல்கள் இருந்தாலும் என்னை மன்னித்துதான் ஆகவேண்டும். என்னை உபேக்ஷிப்பது உனக்கழகல்ல.

---

लाभोयं परमो महेश्वरि शिवे त्वत्पूजने यन्मनः
नित्यं वर्तत इत्यहो भगवति तत्र स्थिरं कुर्विदम् ।
लक्ष्मीं वा हरिनाभिपद्मजसखीं नित्यं वशे मे कुरु
मुख्यं मे नयनस्य पाटवमपि त्वं देहि मातः परे ॥ १४ ॥

லாபோயம் பரமோ மஹேஶ்வரி
ஶிவே த்வத்பூஜநே யந்மந:
நித்யம்வர்தத இத்யஹோ பகவதி
தத்ரஸ்திரம் குர்விதம் ।
லக்ஷ்மீம் வா ஹரிநாபிபத்மஜ ஸகீம்
நித்யம் வஶே மே குரு
முக்யம் மே நயநஸ்ய பாடவமபி
த்வம் தேஹி மாத: பரே ॥ 14 ॥

ஹே தாயே! இப்புவியில் நான் ஜன்மாவை எடுத்ததற்கு உன்னை பூஜிக்க வேண்டுமென்று என் மனது ப்ரவ்ருத்தித்ததே என் பரமலாபம். ஆனால் அந்த மனதை அந்த பூஜையில் ஸ்திரப்படுத்த வேண்டியது உன்னைச் சேர்ந்தது. லக்ஷ்மீ கடாக்ஷமும், ஸரஸ்வதி கடாக்ஷமும், பூர்ணமாக ஏற்படவேண்டும். தத்காலத்தில் முக்யமாக கண்களுக்கு ப்ரகாசத்தைக் கொடுத்து ரக்ஷிக்க ப்ரார்த்திக்கிறேன்.

---

ह्रींबीजाक्षरवासिनि शशिकले श्रीचक्ररूपे शिवे
मीनाक्षि मलयध्वजाधिपसुते श्रीसुन्दरेशप्रिये ।
ह्रीं ह्रीं ह्रीमिति मन्त्रराजमनिशं जप्त्वाऽम्बिकां त्वामहम्
द्रष्टुं देहि ममाद्य चक्षुरमलं त्वां पूजयाम्यन्वहम् ॥ १५ ॥

ஹ்ரீம்பீஜாக்ஷரவாஸினி ஶஶி கலே
ஶ்ரீ சக்ரரூபே ஶிவே
மீனாக்ஷி மலயத்வஜாதிபஸுதே
ஶ்ரீ ஸுந்தரேஶ ப்ரியே ।
ஹரீம் ஹ்ரீம் ஹ்ரீமிதி மந்த்ர ராஜமநிஶம்
ஜப்த்வாம்பிகாம் த்வாமஹம்
த்ரஷ்டும் தேஹி மமாத்ய சக்ஷு ரமலம்
த்வாம் பூஜயாம்யந்வஹம ॥ 15 ॥

ஹ்ரீம் என்ற பீஜாக்ஷரத்தில் வஸிக்கும் தாயே! ஹே சந்த்ரகலே! ஶ்ரீசக்ரரூபிணியான பரதேவதே! ஹே மங்களரூபிணியான பரதேவதே! ஹே மீனலோசநீ! பாண்டியராஜனுக்கு பெண்ணாக அவதரித்த ஹே பரதேவதே! ஸுந்தரேச்வரருடைய தர்மபத்னியே! ஹ்ரீம் பீஜாக்ஷரத்தை மூன்று தடவை ஜபம் செய்து உன் திவ்யஸ்வரூபத்தைப் பார்க்கவேண்டும் என்று ஆசையிருப்பதால், என் கண்ணுக்கு ப்ரகாசத்தைக் கொடுக்கவேண்டும்

श्रीमीनाक्षी पञ्चदशी स्तोत्रं
॥ संपूर्णम् ॥

ஶ்ரீ மீனாக்ஷீ பஞ்சதசீ ஸ்தோத்ரம்
॥ ஸம்பூர்ணம் ॥

Giri Press, Triplicane—C. 1000 20-5-47 Q.H. M.S. 173.